# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 63*
*ஜுலை, 2014*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ம.லோகேஸ்வரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

*ஆசிரியர் குழு*
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்



*வெளியீடு:*

**தமிழ்த்துறை**

**கே.எஸ். ரங்கசாமி**
**கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



©**K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)**

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


## பொறுப்பு

*இன்றைய காலக்கட்டத்தில் ஒரு மாணவன் இந்த சமூகத்தில் தனித்தியங்கி தனது திறமைகளை வெளிப்படுத்தி உயர்பதவி அடைய விரும்புவது வெற்றுக் கனவாக மாறிவருகிற அவலம் தொடர்கிறது.*

*அடிப்படையில் நமது கல்வி முறையில் பல பிரச்சனைகள் இருந்தாலும் மாணவர்களை ஆற்றல் மிக்கோராக மாற்ற வேண்டிய தார்மீக பொறுப்பு ஆசிரியர்களுக்கே உள்ளது. இதற்கு ஆசிரியர் மாணவர் உறவு மேம்படுதல் மிக அவசியம் ஆகும்.*

*கற்றல் கற்பித்தலை மீறிய உன்னதமான உறவுமுறை ஏற்படுதல் வேண்டும். தனியொரு மாணவன் மீதான அக்கறை தீவிரப்படுத்தப்பெற வேண்டும். சமூகத்துடனான நெருங்கிய பிணைப்பை உண்டாக்க வேண்டும். குடும்பம், சமூகக் கட்டமைப்புகளை உள்வாங்கிக் கொள்ளச் செய்ய வேண்டும். காலங்காலமான நடப்புச் சிக்கல்களைக் களைய வேண்டும். படிப்பு, மதிப்பெண் என்பதையும் தாண்டி மாணவன் பயணப்பட வேண்டியவற்றை ஆசிரியர்கள் தினந்தோறும் சுட்டிக் காட்ட வேண்டும்..*

# *உள்ளுறை...*

*கவிதை*

சர்க்கரைத் தமிழ் -3
*தாய்மை – 3*
*செதுக்கலாய் - 3*
*சாராயத்தால் சாகிறது -4*
*பஞ்சாயத்து டி.வி – 4*
*மாதா பிதா குரு தெய்வம் -5*
*தொப்புள் கொடி-6*
*இழப்பு -7*
*நான் நினைத்த வாழ்க்கை-8*
*எமனாக வந்த எமகா-10*
*அம்மா அப்பா-12*
*வாழ்க்கை-16*
*நண்பன் உள்ளம்-16*
*அறிவியல் வளர்ச்சி-18*
*உறுத்தல்கள்-19*
*மறைந்த மரங்கள்-20*
*கல்லூரி வாசல்-22*
*தன்னம்பிக்கை-24*
*விளை நிலமல்ல*
*விலை நிலம்-25*
*தமிழ்த்தாய்-26*
*இப்புவி வாழ்க்கை-29*

*சிறுகதை*

*வாழ்க்கைப் பயம் -21*
*கருணை உள்ளம்-23*
*மீன்கள் - 27*
*மாதையனும் மங்கம்மாவும்-29*
*பிச்சைக்காரப் பாட்டியும்*
*பேரனும் -31*

*கட்டுரை*

*Penicillin production (1941-10*
*மூழ்கிப் போன தமிழ்-11*
*குத்திக்காட்டும் பண்பு-13*
*தமிழர் கலைகள்-22*

*குறிப்புகள்*

*மனிதனின் கடல் நண்பன்-5*
*முதன்முதலில்பதிவு செய்யப்பட்ட பாடல்-7*
*அறிந்து கொள்வோம்-9*
*விந்தைப் பூக்கள்-12*
*குத்திக்காட்டும் பண்பு-15*
*கண்டுபிடித்தவர்கள்-17*
*பூனை குறுக்கிட்டால் அபசகுனமா-18*
*நினைவில் கொள்வோம்-25*

## சர்க்கரைத் தமிழ்

*தித்திக்க முப்பாலால்*
*அமுதம் படைத்தவன்*
*அய்யன் வள்ளுவன்*
*கனல் மொழியிலே*
*காவியம் படைத்தான்*
*கவிச்சக்கரவர்த்தி கம்பன்..*
*யாமறிந்த மொழிகளிலே*
*தமிழ்மொழியேசிறந்ததென்று*
*செப்பினான்*
*மகாகவி பாரதி..*
*இத்தனைச் சிறப்பு வாய்ந்த*
*இனிய தமிழை மறந்து*
*கார மொழியாம்*
*மற்றமொழியைச் சுவைத்து*
*காரமெடுத்து அவதிப்படுவதேன்...?*
*இனிய தமிழைக் கல்லாமல்*
*இக்கரையைவிட்டு*
*அக்கரைபோக ஆசைப்பட்டு*
*சக்கரை நோய் பாதிக்கப்பட்டு*
*தவியாய் தவிக்கும் தமிழனே..!*
*தமிழை வெறுத்தவர்க்கு*
*வாழ்வு என்றுமில்லை*
*தமிழை மதித்தவர்க்கு*
*தாழ்வு என்றுமில்லை*
*தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை*
*தமிழில்*
*சிறந்ததொரு*
*மொழியுமில்லை..!*

***இர.குமரேசன்***
***தமிழ்- இளங்கலை மூன்றாமாண்டு***

## *தாய்மை*

*பிறை நிலவைப் போல*
*கருவில் உருவெடுத்தேன்..*
*உன் இரத்தத்தை உணவாகக் கொண்டு*
*வளரவும் செய்தேன்..*
*பௌர்ணமி நிலவாக*
*ஒளி வீச நினைத்து*
*உனக்கு மறுஜென்மம் என்னும்*
*வழியைத் தந்தேன்..*
*மயக்கம் என்னும் சிறையில் தூங்கி*
*தெளிவு என்னும் மகிழ்ச்சியில் விழித்தாய்*
*விழி கொண்ட நீ*
*என்னை வெறுக்கவும் இல்லை*
*உயிர் கொண்ட என்னை*
*ஒதுக்கவும் இல்லை..*
*என் பௌர்ணமி அழகைக் கண்டு*
*வியந்த தாயே..!*
*என் வாழ்க்கை முழுதும்*
*உன்னைத்*
*தொழுது கொண்டிருப்பேன்..!*

***எ.பாரதி***
***வணிகக் கணினிப் பயன்பாட்டியல் துறை***
***இளங்கலை முதலாமாண்டு அ பிரிவு***

## *செதுக்கலாய்..!*

*உதவிட நினைத்தா*
*இல்லை*
*உதரிட நினைத்தா*
*தெரியவில்லை..*

ஆனால்
நட்பாய் நீ மட்டும்
செதுக்கலாய்
மனதுக்குள்...!
காற்றில் நாம் தவறவிட்ட
நட்புக் காலத்தைப்
புரட்டியபடியே
மீண்டும் ஒரு கவிதை
உன் அவசரத்தில்
என் அவசியம்
மறந்து போனது
நீ மட்டுமே மின்னலாய்..!

**து.காயத்ரி**
**வேதியியல் துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## சாராயத்தால் சாகிறது..

மழைநீர் பொழியாத நாட்டில்
மதுநீர் பொழிகிறது..
மரம் வளர்த்து மழைநீர் சேமிக்காமல்
மதி கெட்டு மதுநீர் சேமிக்கின்றனர்..
ஊருக்கு ஒரு பள்ளியும்
மருத்துவமனையும்
இருக்கிறதோ இல்லையோ
மதுபானக்கடை
இருக்கத் தவறுவதில்லை..
தினந்தோறும் தெருதோறும் விற்கிறது
மாயை தரும் மது..
கேட்பதற்கு யாருமில்லை
கேள்விக்குறியாய் இருக்கிறது நாடு..
மதுவால் மதி இழந்த ஆண்வர்க்கமே!
நீங்கள் தான்
இந்தியாவின்
அவமானச் சின்னங்கள்..
அல்லும் பகலும் உழைத்து
அன்றே குடியில் தொலைகிறீர்கள்..
மனைவி மக்கள் வீடு
அனைத்தும் வீதியில்
நீயோ போதையில்..
மாறுமா இவர்களது நிலைமை..
மாற்றுவதுதானே அரசின் கடமை..
மலரும் புதுயுகம்
மாறும் நம் யுகம்
என்கிற பழைய நம்பிக்கையிலேயே
வாழ்ந்து போகிறேன்... !

**பெ.லோகநாதன்**
**இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு**

## பஞ்சாயத்து டி.வி.

இணையில்லா வேலை செய்தும்
ஏழ்மை இங்குக் குறையவில்லை
நாடோடி வாழ்க்கையில்
நான் கண்ட இன்பம்
தெருக்கோடியில்
நின்று கேட்கும் இன்னிசை
கால்வலித்தாலும் கண்ணயர்ந்தாலும்
கோலாகலமாக இருக்கும்
எங்க ஊர் பஞ்சாத்து டி.வி.
வயலும் வாழ்வும்
பார்க்கும் பெருசுகள்
ஒளியும் ஒலியும் இளசுகள்
சந்திரகாந்தா சிறுசுகள்
சக்திமான் குட்டீசுகள் என்று
கட்டியணைத்திருக்கும்

எங்கள் ஊர் பஞ்சாயத்து டி.வி.
எத்தனைப் பகையிருந்தாலும்
ஒன்று கூடி சிரித்து மகிழ்வோம்..
அருகில் இருந்து நலம் விசாரிப்போம்..
மனித நேயம் மறைந்து போன
இவ்வுலகில்
மீண்டும் தேவைதான்
பஞ்சாத்து டி.வி.க்கள்...

**எஸ்.சோபனா**
**உயிர்த்தொழில் நுட்பவியல் 'அ' பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## மாதா பிதா குரு தெய்வம்

அன்னையைத் தெய்வம் என்கிறோம்
வழிபட வேண்டிய அவளைப்
பாதிவழியில்
விட்டுவிடுகிறோம்..
தந்தையை ஆசான் என்கிறோம்
அள்ளிக் கொடுத்த அவனைத்
தள்ளிவிட்டுப் போகிறோம்..
குருவை அனுபவம் என்கிறோம்
அனைத்தும் தந்த அவரை
அழித்துவிட்டு வாழ்கிறோம்..
இவர் மூவர்தான்
நம் கண்முன் இருக்கும்
இறைவன் என்கிறோம்..
இதனால் தான்
அருள் இல்லாத பொருள் தேடி
இருள் உலகில் நிற்கிறோம்..!

**பி.வித்யா தேவி**
**இளங்கலை முதலாமாண்டு**
**கணினி அறிவியல் அ பிரிவு**

## மனிதனின் கடல் நண்பன்

டால்பின்கள் எப்போதும் மனிதர்களுக்குத் தோழமையாகவே இருந்திருக்கின்றன. ஆனால் சுயநலம் மிக்க மனிதர்கள் தொடர்ந்து டால்பின்களைத் தொந்தரவு செய்து துரோகம் புரிகின்றனர். ஆனால் மீண்டும் மீண்டும் மனிதனை நாடி நட்பு கொள்ளும் ஓர் உயிரினம் டால்பின்..

நிலத்தில் மனிதனின் நண்பனாக இருப்பது நாய். நாய்களுக்குக் கூட மனிதனைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆனால் டால்பின்களுக்கு மனிதனால் ஆகக் கூடிய சிறு பயன்கள் கூடக் கிடையாது. மாறாகத் தொல்லைதான் அதிகம். ஆனாலும் டால்பின் மனிதனுக்கு உதவும் குணத்தில் இருந்து மாறுவதே இல்லை.

கடலில் திசை மாறிப் போகும் படகுகள், கப்பல்களுக்கு வழி காட்டுவது. நீரில் மூழ்கிய மனிதர்களை முதுகில் ஏற்றிக்கொண்டு கரை சேர்ப்பது போன்ற உதவிகளைச் செய்கின்றன. திமிங்கலம், சுறா போன்ற ஆபத்தான உயிரினங்கள் வந்தால் மனிதர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கிறது. திமிங்கலம், சுறா

ஆகியவற்றிடம் சிக்கிக் கொண்ட மனிதனை மீட்பதற்காக அவற்றுடன் சண்டையிட்டு இறந்து போன டால்பின்கள் ஏராளம் உண்டு. டால்பின்கள் இப்படி மனிதனுக்குப் பாய்ந்து பாய்ந்து உதவி செய்ய காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் மனிதனைப் பார்த்ததுமே டால்பின்கள் தண்ணீருக்கு மேல் துள்ளிக் குதித்து மகிழ்ச்சியில் விளையாடுகின்றன.

இந்தப் பழக்கமே டால்பின்களை மனிதன் வேட்டையாடுவதற்கு வசதியாகிப்போனது. ஜப்பானில் டாய்ஜி என்ற கடல் பகுதியில் ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான டால்பின்களை வீர விளையாட்டு என்ற பெயரில் கொன்று குவிக்கிறார்கள். கடந்த 15 வருடங்களில் மட்டும் உலகம் முழுக்க கொல்லப்பட்ட டால்பின்களின் எண்ணிக்கை 67 ஆயிரத்துக்கும் மேல்.

மனிதர்கள் என்றைக்கும் நமக்குக் கெடுதல் செய்பவர்கள் தான் என்பதைப் புரிந்து கொள்ளும் புத்திசாலித்தனமும் டால்பின்களுக்கு உண்டு. முன்பெல்லாம் நியூசிலாந்து கடற்பகுதியில் சுற்றிச் சுற்றி வந்து டால்பின்கள் விளையாட்டு காட்டும். இப்போது சுற்றுலா படகுகளைப் பார்த்தாலே நீருக்குள் சென்று மறைந்து கொள்கின்றன. மனிதன் டால்பின்களைப் படுத்தும் பாட்டுக்கு அது மனிதனைத் திருப்பித் தாக்காத வரை பிழைத்தான். திருப்பித்தாக்கத் தொடங்கினால் அவ்வளவுதான் என்று எச்சரிக்கிறார் டால்பின்களைப் பற்றி ஆராய்ந்து வரும் கேத்லீன். கடல் நமக்கு வீடல்ல அங்கே நாம் விருந்தாளிகள் தான். இன்னொருவர் வீட்டுக்குச் செல்லும் போது விருந்தாளிகளுக்கென இருக்கும் எல்லைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

டால்பின்களுக்கு நாம் நட்பைப் பரிசளிப்பதன் மூலம் அவற்றை மீண்டும் கடல் மேல் கொண்டு வர முடியும் என்று நம்பிக்கைத் தெரிவிக்கிறார்.

டால்பின்களுக்குத் தமிழ்ப் பெயரும் உண்டு. ஓங்கில் என்பதாகும். மீனவர்களின் பேச்சு வழக்கில் இன்னும் இப்பெயர் உண்டு.

**தொகுப்பு**

**பா.தயாநிதி**

## தொப்புள் கொடி

திறந்த வெளியில் கிடக்கின்றது
தொலைந்து போன
என் சொந்தங்கள்
துவண்டு போன என் உள்ளம்
துன்பத்திலே தள்ளப்பட்டது..
அழுது தீர்க்கவும்

*குறையைக் கேட்கவும்*
*இங்கு யாருமே இல்லை*
*இருப்பது என்னவோ*
*அலறல் சத்தங்களும்*
*அழிந்து போன*
*நீதியின் வறுத்தங்களும்*
*சிதறிக் கிடக்கும் தோட்டாக்களும்*
*சிதைந்து கிடக்கும்*
*பீரங்கிக் குண்டுகளும்*
*புதைந்து போன*
*எம் மக்களைப் பார்த்துக்*
*கண்ணீர் விடுகிறது சிவப்பு நிறத்தில்*
*கரையாகிறது*
*தமிழ் ஈழத்தொப்புள் கொடியில்...*

**குண.சூர்யபிரபா**
**இளங்கலை இரண்டாமாண்டு**
**உயிர்த்தொழில் நுட்பவியல் 'அ' பிரிவு**

## முதன்முதலில் பதிவு செய்யப்பட்ட பாடல்

*முதன்முதலில் பதிவு செய்யப்பட்ட பாடல் ஒலித்த நாள் 1888 ஆகஸ்ட் 14. இசைமைப்பாளர் - ஆர்தர் சல்லவன். இசையமைத்த பாடல் - தி லாஸ்ட் கார்டு.*

*அமெரிக்க விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனால் கண்டுபிடிக்கபபட்டதே போனோகிராப் எனும் ஒலிப்பதிவுக் கருவி.*

*இதில் ஒலியைப் பதிவு செய்த உடன் அதை ஒலிக்க வைக்க முடியும் லண்டனில் வசித்து வந்த அமெரிக்க அறிவியல் ஆர்வலர் ஜார்ஜ் கோராடுக்கு அந்தக் கருவியை எடிசன் அனுப்பி வைத்தார். அந்தக் கருவியைப் பயன்படுத்தி ஆர்தர் சல்லவனின் தி லாஸ்ட் கார்டு பாடலைப் பதிவு செய்தார் ஜார்ஜ் கோராட்.*

*14.08.1888 அன்று அந்தப் பாடலை பத்திரிக்கையாளர்கள் முன் ஒலிக்கச் செய்தார் ஜார்ஜ் கோராட். அதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த ஆர்தர் சல்லவன் எடிசனுக்கு நன்றி தெரிவித்தார்.*

*அப்பொழுது அவர் ஒலியைப் பதிவு செய்யும் உங்கள் கருவி மிகவும் அற்புதமானது எனினும் அதில் மோசமான கருத்துகளையும் பதிவு செய்யலாம் அல்லவா..? எனும் தனது கருத்தினைப் பதிவு செய்து அனுப்பியிருந்தார்.*

**தொகுப்பு**
**வெ.திவ்யபாரதி**
**இளங்கலை முதலாமாண்டு**
**கணினிப் பயன்பாட்டியல் ஈ பிரிவு**

## இழப்பு..?

*காவோலை மட்டையைப்*
*பேட் ஆக்கி*
*பழைய பனங்கொட்டையைப்*
*பந்தாக்கி*
*ஆவாரங்குச்சியை*

ஸ்டெம்ப் ஆக்கி
ஆடிய கிரிக்கெட் ஆட்டம்..
அணிலா புனிலா
ஆட்டத்தில் ஏமாந்த
சோனகிரிகளை
இறக்கி விட்டுப் பார்த்த
வேடிக்கை..!
பஞ்சராய்ப் போன
சைக்கிள் டயர்களை மாட்டிக்
கைத்தடியால் அடித்துப்
பஞ்சாய்ப் பறக்கும்
வேகம்..!
திருடன் போலீஸ் ஆட்டத்தில்
எப்போதுமே
போலீஸாக ஆடும்
இருமாப்பு..!
விடுமுறை நாட்களில்
ஆளுக்கு ஒரு பிடி அரிசி
பருப்பு மிளகாய் புளி
எனச் சேர்த்து ஆக்கிச் சாப்பிட்ட
கூட்டாஞ்சோறு...!
எட்டிப் பார்க்கும் போது
கிணற்றுக்குள் தள்ளிவிட்டு
நீச்சல் தெரியாதவர்களை
நீச்சல் கற்க வைக்கும்
தந்திரம்..!
மழைக்காலங்களில்
காளைமாட்டின்
வால் பிடித்தும்
எருமை மாட்டின்
முதுகில் ஏரியும்
கரை கடக்க முயற்சித்த
சவாரிகள்..!
பௌர்ணமி நிலா வெளியில்
பசங்களாய்க் கூடிப் பேசிய
அரட்டைகள்..!
வெள்ளி இரவு 7.30
ஒலிஒளிக் காட்சிக்காகவும்
ஞாயிறு பகல் 9.00மணி
ஸ்ரீ கிருஷ்ணாவிற்காகவும்
அப்பாவிற்குத் தெரியாமல்
அடுத்த தெருவிற்குச் சென்று
பார்த்து வரும் ஆனந்தம்..!
எந்த நேரம் என்று தெரியாமல்
வெளிநாட்டிலிருந்து வரும்
அண்ணனின் தொலைபேசிக்காகப்
பஞ்சாயத்துத் தொலைபேசிக்கருகில்
காலை முதல் காத்துக்கிடந்த
காத்திருப்புகள்...
வயது வந்தோரின்
கேலிப் பேச்சுகள்..!
வயதானவர்களின்
வசைகள்..
ஏரிக்கரையில் ஏத்துமீன் பிடித்த
அனுபவங்கள்..
இவையனைத்தும்
இழந்தது
நான் மட்டுமல்ல
இந்தத் தலைமுறையும் தான்..!

**மா.ப.சி.**
**தமிழ்த்துறை**

## நான் நினைத்த வாழ்க்கை

மரங்களோடு சேர நினைத்தேன்

இலைகளாக..
பூக்களோடு சிரிக்க நினைத்தேன்
இதழ்களாக..
பறவைளோடு பறக்க நினைத்தேன்
இறகுகளாக..
மயிலோடு ஆட நினைத்தேன்
வண்ணத்தோகைகளாக..
ஆற்றில் நீந்த நினைத்தேன்
மீன்களாக..
மழையோடு தூர நினைத்தேன்
துளிகளாக..
இப்படி
பூமியோடு இணைந்து விட்டேன்
இயற்கையாக..

**மு.நந்தினி**
**இளங்கலை முதலாமாண்டு**
**கணிதவியல் துறை**

## அறிந்து கொள்வோம்

நாம் இறந்த பிறகும் கண்கள் 6 மணிநேரம் பார்க்கும்
பிறந்து ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது.
நான்கு வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு சுமார் 400 கேள்விகள் கேட்கும்.
கருவில் முதன்முதலில் உருவாகும் உறுப்பு இதயம்.மனிதன் இறந்ததும் முதலில் செயலிழக்கும் உறுப்பும் இதுவே.
மனித உடலில் சுமார் 6 கோடியே 50 இலட்சம் செல்கள் இருக்கின்றன.
ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள்
பழ மரங்களில் நீண்ட காலம் விளைச்சல் தருவது ஆரஞ்சு மரம். சுமார் 400 ஆண்டுகளாக தொடரந்து விளைச்சல் தரக்கூடியது.
உலகிலேயே மிகச் சிறிய மரம் குட்டை வில்லோ மரம். அதன் உயரம் இரண்டு அங்குலம்.
ஒரு தர்பூசணிப் பழம் இருந்தால் அதிலிருந்து 6 இலட்சம் தர்பூசணிப் பழங்களை உற்பத்திச் செய்யலாம்.
நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.
ஒரு புள்ளிக்குரிய இடத்தில் 70,000 அமீபாக்கள் நிரம்பியிருக்க முடியும்.
தரையில் முதுகு படும்படி உறங்கும் உயிரினம் மனிதன் மட்டுமே.
யானையின் கால் தடத்தின் நீளத்தை அளந்து அதை ஆறால் பெருக்கி வரும் விடையே யானையின் உயரமாக இருக்கும்.

**தொகுப்பு**
**மா.ஜெகநாதன்**
**இளங்கலை முதலாமாண்டு ஈ பிரிவு**
**கணினிப் பயன்பாட்டியல் துறை**

## *Penicillin production (1941)*

*In 1938, Howard Florey (1898-1968) and Ernst chain (1906-1979), two pathologists working at the university of Oxford. Read a paper published nine years earlier about a substance called penicillin.*

*Its author Alexander Fleming recounted how spores of the mold penicillium notatum had entered his bacterial culture dishes and killed some of the bacteria.*

*Florey and chain recognized the significance of Fleming's observation and obtained a culture of the original mold.*

*Initially they encountered difficult in obtaining enough penicillin but Norman heatby a bio chemist on the team, devised ways of isolating penicillin without destroying it.*

*By D-day in june 1944 enough penicillin was available to allow unlimited treatment of allied troops.*

*In 1945 Florey chain and Fleming shared the noble prize. In his noble address, Fleming presciently predicted the problem of antibiotic resistance.*

**M.Marufa**

***III B.Sc.,Chemistry***

## ***எமனாக வந்த எமகா...***

*வாகனம் வேண்டும் என்று*
*வாஞ்சையோடு கேட்ட உனக்கு*
*வாங்கித்தந்தோம் எமகா எனும் எமனை..*
*சரித்திரச் செய்தியில்*
*வரவேண்டிய உன்முகத்தைக்*
*கண்ணீர் அஞ்சலியில்*
*பார்த்த பாவி நாங்கள்...*
*விளையாட்டில் வென்ற உன்னோடு*
*விதி விளையாடும் என்று கனவிலும் நினைக்கவில்லையே..*
*கடிகாரம் வாங்கி வந்த*
*உன் அப்பா*
*உன் ஒற்றைக்கையைத் துண்டாகப்*
*பார்த்த போது*
*ஓடாமல் நின்று போனது*
*கடிகாரத்தோடு*
*இரத்த ஓட்டமும்தான்..*
*அடிபட்ட எமகா வாகனம்*
*இன்சுரன்ஸ் பெயரால்*
*மீண்டும் நிற்கிறது*
*புத்தம் புதிதாக*
*என் மகனே நீ மட்டும்...?*

***ஆர்.ஐஸ்வர்யா***

***இளங்கலை இரண்டாமாண்டு***

***உயிர்த்தொழில் நுட்பவியல் 'அ' பிரிவு***

## மூழ்கிப் போன தமிழ்

இங்கு தான் உலகின் முதல் மனிதன் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இங்கு தான் நம் மூதாதையர் வாழ்ந்துள்ளனர் என்று அறிஞர் பலர் எடுத்துரைக்கின்றனர். ஆம் அதன்பெயர் தான் நாவலன் தீவு என்று அழைக்கப்பட்ட குமரிக்கண்டம். கடலுக்கடியில் இன்று அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறது. இது ஒரு காலத்தில் பிரம்மாண்டமாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு தமிழ்க் கண்டம். இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா,தென் ஆப்பிரிக்கா, இலங்கை மேலும் இன்றுள்ள சிறு சிறு தீவுகளை இணைத்தவாறு இருந்த ஒரு பிரமாண்ட இடம் தான் குமரிக்கண்டம்.

ஏழுதெங்க நாடு
ஏழுமதுரை நாடு
ஏழுமுன்பலைநாடு
ஏழுபின்பலை நாடு
ஏழுகுன்றநாடு
ஏழுகுனக்கரை நாடு
ஏழுகுரும்பனை நாடு

என்று இங்கு நாற்பத்தி ஓன்பது நாடுகள் இருந்துள்ளன. ப.்றுளி ஆறு குமரி ஆறு என்று இரண்டு ஆறுகள் ஓடியுள்ளன. குமரிக்கோடு, மணிமலை என்று இரண்டு மலைகளும் இருந்துள்ளன. தென் மதுரை, கபாடபுரம், முத்தூர் என பிரமாண்டமான மூன்று நகரங்கள் இருந்துள்ளன. உலகின் தொன்மையான நாகரிகமான சுமேரியன் நாகரிகம் வெறும் நான்காயிரம் ஆண்டுகள் பழமைதான்.

நக்கீரர் இறையனார் அகப்பொருள் என்ற நூலில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் 9990 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றதாகக் கூறியுள்ளார். தமிழின் முதல் சங்கம் இந்தக் கடலடியில் உள்ள தென் மதுரையில் கி.மு.4440 இல் 4449 புலவர்களுடன் சிவன், செவ்வேள், அகத்தியருடன் 39 மன்னர்களும் இணைந்து பரிபாடல், முதுநாரை, பேரதிகாரம் ஆகிய நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

இவையனைத்தும் அழிந்துவிட்டன. இரண்டாம் தமிழ்ச் சங்கம் கபாடபுரம் நகரத்தில் கி.மு.3700 இல் 3700 புலவர்களுடன் அகத்தியம், தொல்காப்பியம், பூதபுராணம், மாபுராணம் ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன. இவற்றுள் தொல்காப்பியம் மட்டுமே இன்று வரை நமக்குக் கிடைத்துள்ளது.

மூன்றாம் தமிழ்ச்சங்கம் இன்றைய மதுரையில் கி.மு.1850 இல் 449 புலவர்களுடன் அகநானூறு, புறநானூறு, நாலடியார், திருக்குறள்

*ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன. இவ்வளவு பழமையான தமிழனின் வரலாற்றைப் பெருமையுடன் உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டிய இந்திய அரசு எந்த அக்கறையும் காட்டாமல் இருப்பது வேதனையான விஷயம்.*

*இந்திய அரசு வெளிக்கொண்டுவராத நம் வரலாற்றைப் பெருமையுடன் இந்த உலகிற்கு நாம் ஓங்கி உரைத்துக் கொண்டே இருப்போம். தமிழன் என்றொரு இனம் உண்டு தனியே அவனுக்கோர் குணமுண்டு*


**தொகுப்பு**

***பிரதீப்***

***இளங்கலை முதலாமாண்டு ஈ பிரிவு***

***கணினிப் பயன்பாட்டியல் துறை***


## அம்மா அப்பா

*உலகமே பனியால்*
*உறைந்த போது*
*என் உள்ளம் மட்டும்*
*உங்கள்*
*அன்பாலும்*
*அரவணைப்பாலும்*
*உருகிக்கொண்டிருக்கிறது..!*


**து.காயத்ரி**

***வேதியியல் துறை***

***இளங்கலை முதலாமாண்டு***


## விந்தைப் பூக்கள்

*பிளாக் டியுலிங் என்றழைக்கப்படும் ரோஜாவின் நிறம் கருப்பு. இது அல்லி வகையைச் சார்ந்தது.*

*பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி மலர் என்பது நமக்குத் தெரியும் அல்லவா? ஆனால் 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் அதிசய மலர் ஒன்று இருக்கிறது. அதன் பெயர் காக்டஸ். இப்பூக்கள் இந்தியப் பெருங்கடலில் ரீயூனியன் தீவில் காணப்பெறுகின்றன.*

*வாகை ஒரு விந்தையான மலர். மாலையில் மலரும் இந்தப் பூக்கள் நள்ளிரவில் பிஞ்சாகி சில விநாடிகளில் வளர்ந்து காலையிலேயே அது காயாகிவிடும்*

*ரைகிரிட்டல்லா ரூப்ரா என்ற பெயருடைய செடி ஐரோப்பாவில் உள்ளது. இதன் பூக்கள் சாக்லெட்டின் மணத்தையும் நிறத்தையும் கொண்டவை.*

*ஜாவா மலைப்பகுதியில் ராயல் கௌஸ்ஸிப் என்ற பூச்செடி தோன்றினால் எரிமலை வெடிக்கப் போகிறது என்று அர்த்தமாம்.*


**தொகுப்பு**

***எஸ்.பாலசுந்தரி***

***வேதியியல் துறை***

***இளங்கலை முதலாமாண்டு***

## அம்மா

அம்மா என்றொரு கலைமகள்
பாசம் என்ற அன்பைத் தந்தாள்
சிசுவானது உயிருடன் பிறக்கும் போது
அந்த அன்பு பிறக்கிறது..
உன்னை நினைத்து நீ
உருகுவதும் ஒரு அன்புதான்..
பாசத்தால் உணருகிறேன்
அன்னையின் குணத்தை
அன்பால் உணருகிறேன்
அன்னையின் பாசத்தை...

**பி.தனுஷ்குமார்**
**வேதியியல் துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## தாயே..!

தாயே
நீ ஈன்றதால் தான்
நான் சுவாசிக்கிறேன்
என்கிறார்கள்
விவரம் தெரியாதவர்கள்..
அவர்களுக்கெப்படித் தெரியும்
நான் சுவாசிப்பதே
உன்னைத்தான் என்று..!

**எம்.சிந்தியா**
**வேதியியல் துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

**எழுத்தாணி – 2**

### குத்திக்காட்டும் பண்பு

பண்டைக் காலத்தில் ஆண், பெண் உறவுமுறையினூடாக நம் முன்னோர்களின் குடும்பப் பின்னனியை ஓரளவிற்கு அறிந்துகொள்ள முடிகிறது. திணை அடிப்படையில் நிலத்தினைப் பிரித்து ஒவ்வொரு (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) நிலத்திற்கும் ஒவ்வொரு வகையான ஒழுக்கங்களை (பழக்கவழக்கங்கள் என்று ஊகித்துக் கொள்க) சுட்டியுள்ளனர். இவற்றுள் மருதத்திணைஏனைய திணைகளைக் காட்டிலும் குடும்பப் பின்னனியைச் சார்ந்தது என்று குறிப்பிடலாம். தலைவன்,தலைவி,தோழி மூவரும் முக்கியக் கதாபாத்திரங்கள். இம்மூவருக்கும் இடையே தான் பெரும்பாலும் உரையாடல் நிகழ்ந்திருக்கிறது. அப்படி உரையாடும் பொழுது வெறும் கருத்தை மட்டுமே கூறுவதாகப் புலவர்கள் பாடலைப் புனையவில்லை. இயற்கையை வருணித்து அதனூடாக மாந்தர்களது உணர்வுகளைப் பதிவு செய்துள்ளனர். அப்படி ஒரு அருமையான குடும்பப் பின்னனியில் அமைந்துள்ள கருத்து வருமாறு:

தலைவி கற்பமடைந்து ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருக் கிறாள். ஆனால் தலைவன் குழந்தையை ஈன்றுள்ள தனது மனைவியை விட்டு நீங்கி

பரத்தையரிடம் சென்று அவளுடன் வாழ்ந்து வருகிறான். இப்படியே பல நாட்கள் கழிந்த பின்பு திடீரென மனைவியும் குழந்தையும் நினைவுக்கு வர மீண்டும் தனது இல்லத்தை நோக்கி வருகிறான். இப்போது தலைவனை நோக்கி தலைவி மெல்லிய கோபத்துடன் பேசுகிறாள்... அந்தப் பேச்சு அத்தனை அழகு வாய்ந்தது. கொஞ்சம் கவனித்துப் பாருங்களேன்..!

பழனப் பல்மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர்நறியர் நின்பெண்டிர்
பேஎய் அனையம்யாம் சேய்பயந் தனமே
(ஐங்குறுநூறு - 70)

**புதுக்கவி வடிவம்**

எல்லோரும் பயன்படுத்துகின்ற
அழகுமிகு குளம்..
சிறிய குளம் என்றாலும்
அதில் எத்தனை வகை மீன்கள்..
அடடா கண்கொள்ளாக் காட்சி..
அதோ
துள்ளித் திரிந்த
ஏதோ ஒரு வகை மீனை
எங்கிருந்தோ பறந்து வந்த
அந்த நாரை
கொத்தித் தூக்கிக் கொண்டு செல்கிறது..
தூக்கிக் கொண்டு எங்கு சென்றது..?
அதோ
வயல்வரப்பில் வளர்ந்துள்ள
மருத மரத்தின் உச்சிக்கே
கொண்டு சென்றது..
தண்ணீரில் இருந்த மீன் இப்போது
மரத்தின் உச்சியில்..
உயிர் மட்டும் இல்லை
அவ்வளவுதான்..
இத்தகைய வளமைக்குக் காரணம்
பெருக்கெடுத்து ஓடுகின்ற நீர்தான்..
இப்படி வளமை மிக்க
ஊருக்குச் சொந்தக்காரனே..!
நான் பிள்ளையைப்
பெற்றுவிட்டதால்
உன் கண்களுக்கு இப்போது
நான் பேய் போன்று
தெரிகின்றேன் அல்லவா...?
என்னைவிட உன் பரத்தையரே
தூயவர்
நறுமணம் மிக்கவர்
ஆகையால் நீ
அங்கேயே செல்வாயாக
என் அன்புக் கணவனே..!
இதற்கு மேல்
கணவனை இடித்துரைக்க
முடியுமோ..?
கணவனும் இதற்கு மேல்
பரத்தையை நாடுவானோ..!
இதுதான் தமிழ்ப் பெண்களின்
நாகரிகமான
எடுத்துரைப்பு...!

**உரைவடிவம்**

எல்லோருக்கும் பொதுவான ஒரு நீர்நிலையில் பலவகையான மீன்கள் துள்ளித்திரிந்ததைக் கண்ட நாரை மீன் ஒன்றைக் கவ்விக்கொண்டு மருத மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்று அமர்ந்தது. இத்தகைய வளத்திற்குக் காரணமான நீர்ரிலையை உடைய ஊரனே! நான் குழந்தையைப் பெற்றதால் நான் பேய் போன்று இருப்பதாகக் கருதிப் பரத்தையரை நாடிச் சென்றாய். செல்வாயாக என்னை விட பரத்தையரே தூயவர். நறுமணம் வீசக்கூடியவர்.

**பெறக்கூடிய கருத்து**

மனைவி கற்பமடைந்துள்ள காலத்தில் தலைவன் பரத்தையை நாடிச் சென்றுள்ளான்

சென்னி என்றால் தலை, உச்சி என்று பொருள். சென்னிமலை எனும் ஊர் ஈரோடு பகுதியில் உள்ளது. இதற்கு உச்சிமலை என்று பொருள் கொள்ளலாம். இவ்வூர்ப் பெயர் சங்க காலத்தைய சொல்லாட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

நாரையாகிய தலைவன் பல்வகை மீன்களாகிய பல பரத்தையரோடு உறவுகொண்டு பழனமாகிய அவர்களது இல்லத்தில் வாழ்ந்து வந்தான். மருதமாகிய அவனது சொந்த இல்லத்தை மறந்து விட்டு என்பது இதனுள் பொதிந்து கிடக்கும் பொருள். பேய் எனும் நம்பிக்கை சார்ந்த சொல் கையாளப்பெற்றுள்ளது.

**கீறல் தொடரும்...**

**அகரன் - தமிழ்த்துறை**

## உங்களுக்குத் தெரியுமா?

**ஈ மொய்க்காத நாவல்**

ஏர்னெஸ்ட் வின்செண்ட் ரைட்ஸ் என்பவர் புகழ் பெற்ற எழுத்தாளர். இவர் 1939 ஆம் ஆண்டு காட்ஸ்பி என்ற நாவலை எழுதினார். அதில் 50110 சொற்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. ஒரு சொல்லில் கூட E எனும் எழுத்துக் கிடையாதாம். ஈ மொய்க்காத நாவல் இதுதான்.

**முதல் தட்டச்சு நாவல்**

டாம் சாயரின் வீரதீரச் செயல்கள் என்ற நாவல் தான் முதன்முதலில் தட்டச்சில் அச்சடிக்கப்பட்ட நாவல்.

**இப்படியும் பேசலாமோ..?**

டொமினிகா தீவில்
ஆண்கள் பேசும் மொழியும்
பெண்கள் பேசும் மொழியும்
வெவ்வேறு மொழிகளாம்
எப்படித்தான் பேசித் தீர்க்கிறார்களோ..?

**அகராதி பி(ப)டித்தவர்**

மெலனேசியாவின் மதகுரு ஜான் கோலரிட்ஜ் பேட்டர்சன் (1827-1871) என்பவர் மிக அற்புதமாக அகராதி

எழுதுவதில் வல்லமை படைத்தவர். இவர் படைத்த அகராதிகள் மொத்தம் 25. இந்த அகராதிகள் ஒவ்வொன்றும் அவர் படித்த ஒவ்வொரு மொழியைச் சார்ந்தவையாம்..

**பட விளக்கப் புத்தகம்**

1658 ஆம் ஆண்டு ஜெர்மனியில் தான் பட விளக்கத்துடன் குழந்தைகள்புத்தகம் வெளியிடப்பட்டது.

**உணவும் முனிவர்களும்**

தவமிருக்கும் காலத்தில் தங்களது மனவலிமையைக் கொண்டு பல ஆண்டுகள் முனிவர்கள் உணவின்றி வாழ்கின்றனர். சொல்லப்போனால் ஒரு தவத்தை முடித்து மற்றொரு தவத்தை மேற்கொள்வதற்கு முன்பு தண்ணீரை அருந்துவார்களே தவிர உணவை உட்கொள்வதே இல்லை. இது மலைக்க வைக்கும் ரகசியம்தான்.

**தொகுப்பு**

**மு.சதீஸ்குமார்**

**தமிழ்- ஆய்வியல் நிறைஞர்**

## நண்பன் உள்ளம்

உன் உள்ளத்தில் இருக்கும்
காயங்களின் வலிகளை மறைக்க
வெளியுலகத்திடம்
பொய்யாய் புன்னகைக்கிறாய்..
உன் புன்னகையில் இருக்கும்
வேதனையை நான் அறிந்தும்..
உன் அன்பான புன்னகையின் நடிப்பில்
என்னை மறந்து
நானும் பொய்யாய்
புன்னகைக்கிறேன்
உன் நட்பின் நீடிப்பில்...!

**சி.மஞ்சுபார்கவி**

**இளங்கலை கணினி அறிவியல்**

**மூன்றாமாண்டு அ பிரிவு**

## வாழ்க்கை

வருவதும் போவதும்
இன்பமும் துன்பமும்..
வந்தால் போகாதது
புகழும் பழியும்..
போனால் வராதது
மானமும் உயிரும்..
தானாக வருவது
இளமையும் முதுமையும்..
நம்முடன் வருவது
பாவமும் புண்ணியமும்..
தவிர்க்க முடியாதது
பசியும் தாகமும்..
அடக்க முடியாதது
ஆசையும் துக்கமும்..
அழிவைத் தருவது
பொறாமையும் கோபமும்..
அனைவருக்கும் சமமானது
பிறப்பும் இறப்பும்..!

**தொகுப்பு**

**சே.நந்தினிதேவி, வே.பூவரசி**

**தமிழ்-இளங்கலை முதலாமாண்டு**

## வித்துகள் உறங்காது

விதைத்தவன் உறங்கி விடுவான்
ஆனால்

விதைகள் உறங்குவதில்லை..
எண்ணியவன் உறங்கிவிடுவான்
ஆனால்
எண்ணங்கள் உறங்குவதில்லை..
திசைகள் உறங்கிவிடும்
ஆனால்
தென்றல் உறங்குவதில்லை..
மரங்கள் உறங்கிவிடும்
ஆனால்
மரத்தின் வேர்கள் உறங்காது..
கொடிகள் உறங்கிவிடும்
அதன்
பூக்கள் உறங்கிடாது..
கவிஞன் உறங்கிடலாம்
ஆனால்
கவிதைகள் என்றும் உறங்காது..!
தொகுப்பு

**சே.பவித்ரா**
**இளங்கலை கணினி அறிவியல்**
**முதலாமாண்டு ஈ பிரிவு**

## மூன்றெழுத்து

சிவன் இயேசு அல்லா என்று
தெய்வங்களின்பெயர்கள் மூன்றெழுத்து
விபூதி சிலுவை தொப்பி என்று
மதச்சின்னங்கள் மூன்றெழுத்து
கோவில் சர்ச் மசூதி என்று
வழிபாட்டுத் தலங்கள் மூன்றெழுத்து
மனிதர்களான நம்மிடையே
ஏன்
பகைமை சண்டை குண்டு
என்ற மூன்றெழுத்து
இவைகளைத் தவிர்த்து
இனி நாம்
அன்பு உதவி நட்பு என்ற
மூன்றெழுத்து நேசத்தோடு
சேர்ந்து வாழ்வோம்
தேசத்தைக் காப்போம்..!

**வி.காயத்திரி**
**இளங்கலைக் கணிதம்**
**முதலாமாண்டு ஆ பிரிவு**

## கண்டுபிடித்தவர்கள்

குளோரின் - கே.ஷீல்லி : 1774
அலுமினியம் -எ.ஃப். ஹோலர் : 1827
கால்சியம் - எச்.டேவி : 1808
பாஸ்பரஸ் - எச்.பிராண்ட் : 1669
ரேடியம் - பி.எம்.கியூரி : 1898
பொட்டாசியம் - எச்.டேவி : 1807
நைட்ரஜன் - டி.ரூதர்போர்டு : 1772
யுரேனியம் - இ.எம்.பெலிகாட் : 1841
அயோடின்- பி.கோர்ட்டாய்ஸ் : 1812
ஹைட்ரஜனை-எச்.கேவண்டிஸ்: 1766
நிக்கல் - ஏ.க்ரான்ஸ்டெட் : 1751
மிதிவண்டி - கிர்க்பாடிரிக் மாக்மிலன் : 1839,40
சினிமா - லூயி பிரின்ஸ் : 1885
லேசர் - டி.எச்.மைமா : 1960
தீக்குச்சி - ஜான் வாக்கர் : 1826
நீர்மூழ்கிக் கப்பல்-டேவிட் பிரஷ்நெல் : 1776

**தொகுப்பு**
**பி.திவ்யபாரதி**
**உயிர்த்தொழில் நுட்பவியல் துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## அறிவியல் வளர்ச்சி

அறிவியலால் அடைந்த
பயன் ஆயிரமுண்டு
அவையாவும்
மனித முயற்சியாலே பிறந்தவை
என்பதற்கு ஒரு வரலாறு உண்டு..
பறவையைப் போல தானும்
பறக்க ஊர்தி
பாம்பைப் போல தானும்
ஊர்ந்திட அதற்கோர் ஊர்தி..
அணிந்த ஆடைகள்
அனைத்தும் வெளுக்க
அதற்கோர் கருவி..
ஆட்டி அரைத்து
அறுசுவை உணவு படைக்க
அதற்கோர் கருவி..
ஆயிரந்தூரம் நடந்து பேச
அதற்கோர் கருவி..
மண்ணுலகத்தினின்று
விண்ணுலகம் சென்று
அண்டையுலகம் காண
அதற்கோர் கருவி..
உலகமே வெப்பமயமானாலும்
வேப்பமர வளியைப் போல
வேர்வை தடுக்கும்
குளிரூட்டிகள்..
மனித முயற்சியால்
அறிவியல் வளர்ச்சியில்
முட்பாதைகளும் தார்ச்சாலைகள்..
திரி விளக்குகளும்
தெரு விளக்குகள்..
ஆம் எட்டாத வானமும்
இதோ என்னிடத்தில்
பொத்தானைத் தட்டினால்
பகட்டான புதுவாழ்வு..
நிலாச்சோறு மறைந்து
நிலவிலேயே
சோறு என்றாகிவிட்டது..
எல்லாம் அறிவியலாலே...
பொங்கி வழிவதும்
ஓங்கி வளர்வதும்
அறிவியல் கண்ட அர்த்தசாஸ்திரம்..!

**நா.சங்கீதா**
**தமிழ்-இளங்கலை முதலாமாண்டு**

## பூனை குறுக்கிட்டால் அபசகுனமா..?

தமிழகத்தில் மக்கள் வெளியில் செல்லும் பொழுது பூனை குறுக்கிட்டால் அபசகுனமாகக் கருதுகிறார்கள். அதற்கான உண்மைக் காரணத்தை அறிவோம்.

முற்காலங்களில் மன்னர்கள் தங்களுடைய படைகளுடன் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்லும்போதோ அல்லது மற்ற நாடுகளின் மீது படையெடுத்துச் செல்லும் போதோ காடுகளின் வழியாகத்தான் செல்ல வேண்டும். அக்காலத்தில் வரைபடங்கள் ஏதும் கிடையாது. எனவே படைகள் ஒரு அனுமானத்தின் அடிப்படையில்தான்

*முன்னேற வேண்டியிருந்தது. அக்காலம் முதலாகவே பூனை வீட்டு வளர்ப்புப் பிராணியாக வளர்க்கப்பட்டது. எனவே அவ்வாறு வளர்க்கப்படும் பூனைகள் அருகில் உள்ள காடுகளில் உலாவுவது அவற்றின் இயல்பு. இவ்வாறு உலாவும் பூனைகளை அந்த காடுவழியாகச் செல்லும் படைகள் கண்டால் அருகில் ஏதோ ஒரு கிராமம் உள்ளது என்பதை தெரிந்து கொள்வார்கள்.*

*அந்த ஊர் மக்கள் இவர்களை எதிர்க்கலாம் அல்லது நட்பாகப் பழகலாம் இல்லையெனில் படைவீரர்கள் அந்தக் கிராமத்தைத் தாக்குவதற்குத் தயார்படுத்திக் கொள்வார்கள். அதற்கு சிறிது நேரம் நின்று தங்களைத் தயார்படுத்திக் கொள்வார்கள். அதே படைவீரர்கள் விடுப்பில் தங்கள் ஊருக்குச் சென்றாலும் இதே போன்றுதான் சற்றுநேரம் சிந்தித்துச் செயல்படுவர்.ஆகவே பூனை சென்றால் சிறிது நேரம் சிந்தித்துச் சென்ற நம் முன்னோர் பழக்கம்தான் நாளடைவில் பூனை குறுக்கே சென்றால் அபசகுனமாகக் கருதப்பட்டு தற்பொழுதும் பின்பற்றப்பட்டுவருகிறது.*

*இது ஒரு மூடநம்பிக்கையே தவிர அபசகுனமோ ஆபத்தின் அறிகுறியோ கிடையாது. நமது மூடநம்பிக்கைக்குப் பாவம் பூனை என்ன செய்யும்...?*

***ஞானபிரகாஷ்***

## *உறுத்தல்கள்*

*கூடுகட்டி வாழும் பறவை*
*வீடுகட்ட வேண்டியதை*
*உணர்த்தியது..*
*கொஞ்சிப் பேசும் பச்சைக்கிளி*
*அன்பாகப் பேச உணர்த்தியது..*
*அவசரமாய் அரிசியை*
*இழுத்துச் செல்லும்*
*எறும்புகள்*
*உழைப்பை உணர்த்தின..*
*ஆனந்தமாய் வாலாட்டிய*
*நாய்க்குட்டி*
*நன்றியை உணர்த்தியது..*
*அடிபட்ட காகத்தைச் சுற்றி*
*ஆறேழு காகங்கள்*
*ஒற்றுமையை உணர்த்தின..*
*அடுத்த வீட்டில் வசிப்போரின்*
*பெயர் கூட தெரியாமல்*
*நகர வாழ்க்கை..*
*எல்லாம் இருந்தும்*
*இந்த மனிதர்கள் மட்டும்*
*எதையுமே உணர்த்தாதது*
*என் மனதை உறுத்துகின்றது...!*

***ஆர்.நந்தினி***
***உயிர்த் தொழில் நுட்பவியல்***
***இளங்கலை முதலாமாண்டு***

***சிறுகதை***

## ***வாழ்க்கைப் பயம்***

*ஒரு செல்வந்தருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவர்கள் மூவரில் யார் அறிவாளி என்று மூவருக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அதற்கு தீர்ப்பு சொல்ல ஒரு ஞானியிடம் சென்றார்கள். அந்த ஞானி அம்மூவரிடமும் நீங்கள் மூவரும் இன்னும் ஒரு மாதத்திற்குப் பச்சை நிறங்களை மட்டுமே பார்த்தால்தான் மூவரில் யார் அறிவாளி என்று கூறமுடியும் என்று அனுப்பிவிட்டார். ஒரு மாதம் கழித்து ஞானி அவர்களைச் சந்திக்க சென்றார். முதலாமாவரை பார்க்கச் சென்றார் ஞானி. ஆனால் முதலாமவன் பயந்துகொண்டு ஓர் இருட்டறையிலேயே முடங்கிக் கிடப்பதாகக் கூறினார்கள். இரண்டாமவனைப் பார்க்கச் சென்றார் ஞானி. முதலில் அவர் மீது பச்சை நிறச் சாயம் ஊற்றப்பட்டது. அதன் பின்னரே ஞானி இரண்டாமவனைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார்.*

*அவனது வீடு முழுவதும் பச்சை நிறமாக இருந்தது. பச்சை நிறப் பொருட்களையே பயன்படுத்தினான். பணியாளர்கள் அனைவரும் பச்சை நிற உடை அணிந்திருந்தனர். அவன் வீடு முழுக்க பச்சை நிறம் தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஞானியிடம் வந்த இரண்டாமவன் தங்களுடைய யோசனையால் தன் சொத்து முழுவதும் தீர்ந்து விட்டதாகக் கூறினான்.*

*அடுத்து ஞானி மூன்றாமவனைச் சந்திக்க சென்றார். அங்கு அவருக்கு மிகுந்த வரவேற்பு கொடுக்கப்பட்டது. ஆனால் மூன்றாமவன் வீடு பழையபடியே இருந்தது. ஞானி ஆச்சரியப்பட்டார். காரணம் அந்த வீட்டில் பல வண்ணங்கள் இருந்தது. அதன்பின் மூன்றாமவனைச் சந்தித்த ஞானி அவனே அறிவாளி எனத் தீர்ப்பளித்தார். காரணம் அவன் ஒரே ஒரு பச்சை நிறக் கண்ணாடி மட்டுமே அணிந்திருந்தார்.*

***நீதி***

*1.ஒரு பிரச்சனையைப் பார்த்துப் பயந்து விடக் கூடாது*

*2.எதையும் யோசிக்காமல் செயல்படுத்தக் கூடாது*

*3.ஒரு பிரச்சினைக்கு எளிமையான தீர்வு ஒன்று இருந்தே தீரும். அதைச் சிந்தித்துச் செயல்படுவோம் சிறப்படைவோம்*

***ஞானபிரகாஷ்***

## வாழ்க்கை

*தண்ணீர் படாமல் கூட*
*கடலைக் கடந்து விடலாம்..*
*கண்ணீர் விடாமல்*
*வாழ்க்கையைக் கடக்க முடியாது..*

இன்ப துன்பங்களைக் கடப்பதும்
கடக்க முயற்சிப்பதும் தான்
வாழ்க்கை..

**பி.கிருஷ்ணமூர்த்தி**
**இளங்கலை மேலாண்மைத்துறை அ பிரிவு**

## மறைந்த மரங்கள்

நியாய தீர்ப்புகள் தந்து
தகராறுகளைத் தீர்த்து வைத்த
ஆலமரம் நின்ற இடம் இதுதான்..
வழிப்போக்கர்களை வரவேற்று
பசி அமர்த்தி
வழியனுப்பியது
இங்கிருந்த அத்தியொன்று..
ஆடுபுலி ஆட்டமாட
நிழற்பாய் விரித்தது
இதிலிருந்த அரசமொன்று..
நினைத்தாலே
எச்சிலை ஊற வைத்த
புளியமரங்கள் இந்த இடத்தில்..
இலைகளைச் சுருட்டி
குழல் ஊதி
குழந்தைகளை ஆனந்தப்படுத்திய
பூவரசின் தடம் இது..
இந்தப் பகுதிகளில் தான்
வேம்புகள் சிரித்துக் கொள்ளும்
வெயில் காலங்களில்..
இப்படித்தான் சொல்லிக்கொடுக்க
முடிகிறது..
இந்தக் காலத் தலைமுறைக்கு…

**மு.ஆதிபவானி**
**தமிழ்-இளங்கலை இரண்டாமாண்டு**

தோழியே..!
என்னை விடச் சிறந்தவர்
உனக்குக் கிடைத்தால்
உன் மனம்
என்னைப் பிரிய நினைத்தால்
நான் கவலைப்பட மாட்டேன்..!
நீ தேடிச் சென்றவர்
உன்னைவிட்டுப் பிரிந்தால்
ஒருபோதும்
கவலைப்படாதே
உனக்காக நானிருப்பேன்..
உன் முகத்திற்குப் பின்பாக..

**பா.பிரியதர்ஷினி**
**தமிழ்-இளங்கலை முதலாமாண்டு**

## சுதந்திரம் பொன்மொழிகள்

1)சுதந்திரத்தோடு இணைந்தது
பணிவும் கட்டுப்பாடும் -
காந்தியடிகள்
2)சுதந்திரம் எனது பிறப்புரிமை –
திலகர்
3)சுதந்திரமாய் இருப்பதே வாழ்க்கை
– அடிசன்
4)சட்டத்திற்கு உட்படும் சுதந்திரமே
உண்மையானது – பர்டன்
5)எங்கே சுதந்திரம் உள்ளதோ
அதுவே என் நாடு – மில்டன்
6)சுதந்திரம் இல்லாத நாட்டில்
சிறப்பு இல்லை - ரூசோ

*7)சுதந்திரம் இல்லாத நாடு பெருங்காடு – நாமக்கல் கவிஞர்*

*8)சுதந்திரம் என்பது நல்லதை அடையும் வழி – மாஜினி*

*9)சுதந்திரம் சமூகத்தின் உதிரம் - ஸ்விப்ட்*

*10)சுதந்திரம் இல்லாத வாழ்க்கை மிருகத்தனமானது – ரஸ்கின்*

**தே.ரமேஷ்**

**தமிழ்-இளங்கலை முதலாமாண்டு**

## கல்லூரி வாசல்

*நான் பிறந்ததோ*
*தொப்புள்கொடி வாசல்..*
*நான் முதல் வார்த்தை பேசியதோ*
*அம்மா எனும் இதழ் வாசல்..*
*நான் கல்வி கற்றதோ*
*பள்ளியின் வாசல்..*
*நான் பெற்ற பொக்கிஷமோ*
*நண்பர்கள் அன்பின் வாசல்..*
*ஆனால்*
*என் வாழ்க்கை தொடங்கியதோ*
*கல்லூரி எனும் நட்பு வாசல்..*

**கு.பூவரசன்**

**கணினிப் பயன்பாட்டில் துறை அ பிரிவு**

**இளங்கலை முதலாமாண்டு**

**அறநெறிச்சாரல் - 3**

## கருணை உள்ளம்

*கோகுல்ராமன் என்ற மிகப்பெரிய செல்வந்தர் இருந்தார். அவருக்கென்று யாருமில்லை. உற்றார் உறவினர் சொந்தம் பந்தம் என்று எவருமில்லை. தன் வயதான காலத்தில் தன்னுடன் யாருமில்லையே என்று ஒருபோதும் அவர் வருத்தப்பட்டதுமில்லை. ஏனென்றால் அவர் வீடுதான் அவருக்கு உலகம். அவ்வீட்டின் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடித் தொட்டித் தங்கமீன்தான் அவருக்கு உறவு. அதனுடன்தான் அவர் பேசுவார்,சிரிப்பார், அழுவார், கோபப்படுவார், புன்னகைப்பார், உணவும் உண்பார். ஒருநாள் தங்க மீனிடம் ஏய்! சாப்பிட்டாயா? நான் சாப்பிட்டேன். நீ எவ்வளவு புத்திசாலி தெரியுமா? உலகில் நீ மட்டும் தான் அழகு. உனக்குள் எவ்வளவு திறமை இருக்கிறது தெரியுமா? என்று பேசிக்கொண்டிருந்தார். பிறகு சரிசரி எனக்குக் கொஞ்சம் வெளில வேலை இருக்கு.*

*எனக்குக் கொஞ்சம் உணவுப்பொருள் வாங்க வேண்டும். உனக்கும் சேர்த்து நான்தான் வாங்க வேண்டியுள்ளது. நான் போய்ட்டு வந்துடுறேன். நீ ரொம்ப துள்ளி விளையாடாதே!.கண்ணாடித் தொட்டியவிட்டு வெளியில் வந்து விழுந்து விடாதே. அதன் பிறகு நான் மீண்டும் அனாதையாகிவிடுவேன்.*

எச்சரிக்கையாய் இரு என்று கூறிவிட்டு கதவை அடைத்து வெளியில் சென்றார்.

திடீரென்று கதவைத் திறந்து மீண்டும் உள்ளே வந்து தன் அலைபேசியை எடுத்துக்கொண்டு திரும்புகின்ற பொழுது ஒரு பெரிய கரிய பூனை ஒன்று மேசை மீது வைக்கப்பட்டிருந்த மீன் தொட்டியையே பார்த்துக் கொண்டிருந்தது. தூக்கி வாரிப் போட்டது. கோகுலராமன் தன் அதட்டல் குரலால் பூனையை விரட்டினார். பிறகு தான் தெரிந்தது அந்த அறையில் இருந்த ஒரு சன்னல் அடைக்கப்படாமல் இருந்தது. நன்றாகக் கதவு சன்னல்களை மூடிய பிறகு மன நிம்மதியுடன் சென்றான் கோகுல ராமன்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு சமையல் அறைக்குள் இருக்கும் புகைக்கூண்டின் வழியாக அந்தத் திருட்டுப் பூனை தொப்பென்று அடுப்புச் சாம்பலில் விழுந்து புரண்டது. துன் உடம்பால் ஒட்டிய சாம்பலை உதிர்த்துச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து மீன் தொட்டியை நோக்கி மெதுவாக நடந்து வந்தது. மேசையின் மீது அமர்ந்து தொட்டியில் உள்ள தங்கமீனைத் தன் வாய் திறந்து கண்களை உருட்டிப் பார்த்தது. தங்கமீனோ விபரீதம் அறியாமல் அங்குமிங்கும் நீந்திக் கழித்தது. இரை உண்ண மேலே வந்து வந்து சென்றது. உற்சாகத்தில் தன்னையே உணராமல் துள்ளிக் குதித்துக் குதித்து விளையாடியது. மூன்றாவது துள்ளலில் சற்று உயரமாகக் குதித்த மீன் கண்ணாடித் தொட்டியின் விளிம்பில்பட்டு மேசையின் மீது வழுந்தது. அருகில் இருந்த பூனை அதனை தலையைச் சாய்த்துப் பார்த்தது.

துள்ளிய மீன் மீண்டும் மேசையை விட்டுக் கீழே விழுந்தது. மேசையின் விளிம்பிற்கு வந்த பூனை பூமியில் விழுந்த தங்க மீன் துடிப்பதைக் கண்டு எட்டிப்பார்த்தது. தன் கால்களை உந்தி மீன் பக்கத்தில் குதித்தது. தன் அகன்ற வாயால் மீனைக் கவ்வுவதற்கும் வெளிக்கதவு திறக்கப்படுவதற்கும் சரியாக இருந்தது. பூனை லாவகமாக மீனைக் கவ்வி மேசை மீது ஏற அக்காட்சியைப் பார்த்த கோகுலராமன் பூனையை விரட்டிக்கொண்டு வந்தார்.

இப்பொழுது பூனை தன் பற்கள் மறந்தும் கூட மீனைக் கடித்துவிடாமல் தன் குட்டியைத் தூக்கிக் கொண்டு போவது போல கண்ணாடித் தொட்டியின் மீது ஏறி தண்ணீருக்குள் மீனைப் போட்டுவிட்டு ஓடியது. தங்கமீன் மீண்டும் துள்ளி விளையாடியது.

விலங்கிற்கும் கருணை உள்ளம் இருப்பதைப் பார்த்த கோகுலராமன் தன்னையே மறந்து மெய்சிலிர்த்து வியப்புடன் கண்ணீர் விட்டார்.

**இராம.தேவணன்**
**தமிழ் - உதவிப்பேராசிரியர்**

## தன்னம்பிக்கை

வானத்தில் நகர்ந்து செல்லும்
மேகத்தைக் கண்டு
வாழ்க்கையில்
எதுவும் நிலையில்லை
என்பதைக் கற்றுக்கொள்...
நிலத்தைவிட்டுப் பிரிந்தாலும்
மழையாக வந்து சேரும்
நீரிடம் நன்றியைக் கற்றுக்கொள்..
கல்வி ஒன்று மட்டுமே
உன்னைக் கௌவரப்படுத்தும் கிரீடம்
என்பதை
அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்..

**ஆர்.சந்தியா**
**தமிழ்-இளங்கலை முதலாமாண்டு**

## நினைவில் கொள்வோம்..

துருக்கியின் தந்தையென அழைக்கப்படும் கமால் அட்டாக் 1925 முதல் 1938 வரை 15 ஆண்டுகள் இறயக்கும் வரை துருக்கியின் ஜனாதிபதியாக இருந்தவர். பாராளுமன்றத்தில் இவர் அமர்ந்திருந்த ஆசனம் இன்றும் காலியாக விடப்பட்டு 'எங்கள் தந்தை அமர்ந்திருந்த இடம்' என்று அழைக்கப்படுகிறது.

காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்ததே இல்லை. அவருடைய தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து பயணங்கள் கப்பலில்தான். இந்தியப் பயணம் முழுவதும் ரயிலில்தான்.

நயாகரா நீர்வீழ்ச்சி 12000 ஆண்டுகளுக்கு முன்பு பனிக்கட்டிப் படுக்கைகள் உருகியதால் உருவான நதியாகும். உலகப் புகழ்பெற்ற இந்த அருவியின் வயது 12000 ஆண்டுகள்.

நைல்நதி 6800 கிலோமீட்டருக்கு மேல் ஓடி ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதும் சுற்றிப் பாய்ந்து செல்கிறது. இந்நதியினால் பயன்பெறும் நாடுகள் மொத்தம் 55 ஆகும்.

நாய்களைத் துணைக்கும் உதவிக்கும் அழைத்துச் செல்லாமல் தன்னந்தனியாக பனிக்கட்டிப் பகுதியில் 63 நாள்கள் நடந்து சென்று வடதுருவத்தை முதலில் அடைந்து சாதனைப் படைத்தவர் டாக்டர் ஜுன் லூயிஸ் எட்டினி என்ற பிரான்ஸ் நாட்டுக்காரர்.

**தொகுப்பு**
**ஆர்.தேசிகா**
**உயிர்த் தொழில்நுட்பவியல் ஆ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## விளை நிலமல்ல விலை நிலம்

பூமித்தாயின் உடலை
பல கூறுகளாகப் பிரித்து
கை எனக்கு
கால் எனக்கென்று
உரிமை கொண்டாடும் மனிதர்களே..!
இவ்வாறு தனித்தனியே பிரித்து
மாடமாளிகை
கூட கோபுரங்கள் என எழுப்பி
சோற்றுக்காகப் பொன்னை
விலைகொடுக்கும் நாள்
வெகுதூரம் இல்லை..
விளை மண்ணை
விலைபேசுதல் முறையோ
விளைநிலத்தையெல்லாம்
பூசி மெழுகிவிட்டு
சிமெண்ட் தரை மீதா
பயிர் விளைவிப்பாய்..?
சோற்றுக்குப் பதில்
மாற்று உண்டோ..?
நீருக்குப் பதில் வேறுண்டோ..?
மானிடனே யோசி
பிறந்த உன் நிலத்தை நேசி...

**ம.மதிலா**
**நுண்ணுயிரியல் துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## தமிழ்த்தாய்

இலக்கிய இலக்கணமாக
அன்பும் அரணுமாக
பண்பும் பாசமுமாக
வீரமும் விவேகமுமாக
களவும் கற்புமாக
பஞ்ச பூதங்களாக
ஐம்பெருங்காப்பியங்களாக
வாழ்வின்நெறியை உணர்த்துபவளே..
திங்கள் உதிர்த்து வர
திக்கெட்டும் முரசுகள் கொட்ட
புலவர்கள் அமர்ந்திருக்க
அரசன் அரவணைப்போடு வளர்ந்த
தமிழை
உலகறியச் செய்வோம்..
மொழிகளுக்கெல்லாம் ஆதியானவள்
நம் தமிழ் என்று
உரக்கக் கூவுவோம்...!

**ம.மதிலா**
**நுண்ணுயிரியல் துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## மீன்கள்

ஒருவழியாகச் சென்னை வந்து சேர்ந்தாச்சு. பயணச் சோர்வு அனைவரையும் தொற்றிக் கொண்டது. முதலில் ஓய்வு பிறகே உணவு என்ற உணர்வில் கிடைத்த இடங்களில் படுத்துக் கொண்டனர். சிறிது நேரத்தில் உணவுகளும் முடிந்தாயிற்று. மறுநாள் காலைப் பொழுது, எங்கு செல்வது என்பது முடிவு செய்யப்பட்டது. எல்லாரைப் போலவும் மெரினா தான்.

அப்பா..... எங்கப்பா.. போறோம். இன்னைக்கு அப்பா உனக்கு நிறயத் தண்ணியக் காட்டப் போறேன். எதுலப்பா.. தொட்டியிலையா? இல்லையிடா நம்ம ஊர்ல... நாம பைக்கில போகும் போது... உனக்கு நிறையத் தண்ணிக் காண்பித்தேன்ல.. ஆஆஆ ஆமா..... நாம இளநி சாப்பிடப் போகும் போது பார்த்தோம்ல... கோயிலுக்கு பக்கத்தில. ஆமான்டா செல்லம் இப்ப அதே மாதிரித் தண்ணியத்தான் உனக்கு நான் காண்பிக்கப் போறேன் அதில நிறைய மீன்கள் இருக்கும் சரியா.... சரிப்பா.... அம்மாவ சீக்கிரம் கிளம்பச் சொல்லுங்கப்பா. நான் கிளம்பிட்டேன்டா பாப்பா.... உங்கப்பா தான் வரனும். இந்தா வந்துன்டேன் போயிடலாம்.

பேருந்தில் ஏறியாச்சு இடமும் கிடைத்துவிட்டது. சன்னல் ஓரத்தில் அவனும் குழந்தையும். அவர்கள் அருகில் அவள். குழந்தையின் கனவு தொடர்ந்தது. அப்பா எங்கப்பா தண்ணியக் காணோம்.. இன்னும் கொஞ்சத் தூரம் போகனும்டா அப்பாத்தான் தண்ணி வரும்..... எவ்வளவு நேரம்பா ஆகும்? ஏன்பா இந்த வண்டி இப்படி மெதுவாப் போகுது? வண்டிய வேகமாப் போகச் சொல்லுங்கப்பா... இந்தப் பஸ்ல தான்டா எல்லாரும் வருவாங்க அதனால அவரு இப்படி மெதுவாத் தான்டா போவாரு. ஆனா சீக்கிரம் வந்திடும்டா.. இன்னும் கொஞ்சம் நேரந்தான். இவங்கலாம் தண்ணி பார்க்கத்தான் வாராங்களாப்பா... இம்..... ஆம்மான்டா.... ஒரு சிலர் வேற வேலைக்குப் போவாங்கடா.

அங்க பாருடா தெரியுதா நிறயத் தண்ணி.... எங்கப்பா நிறயத் தண்ணி. காணோம். நாம உள்ள போயிப் பார்த்தா நல்லாத் தெரியும். வா இறங்கி நடந்து போவோம்....

குழந்தைக்காக எடுத்து வைத்த மாற்று உடை, துடைத்துக் கொள்ளவதற்கான துண்டு, குடிதண்ணீர்ப் பாட்டில், கேமரா என எல்லாவற்றையும் உள்ளடக்கிய பையை மெதுவாய்ச் சுமந்து வந்தாள் அவள். விரைவாய்ச் செல்ல வேண்டும் என்பதற்காக குழந்தையைத் தூக்கி விரைந்து செல்ல முயன்றான் அவன்.

தண்ணீரின் வேகம் கரையை வந்து பார்த்துச் சென்றது. சுனாமியால் புதைந்த மணலையும். தவி தவித்து உயிர்விட்ட மக்களையும் மனதில் நினைத்துக்கொண்டான் அவன். தூரத்துக் கடல் அவனுக்குள் சற்று பயமாகத்தான் இருந்தது. கடவுளை

*வேண்டிக் கொண்டான். சுனாமி வந்தாலும் சேர்ந்தே இருப்போம் என நினைத்தான். சே இது என்ன சிந்தனை. கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்... கடல் மாதேவியை வணங்கிக் கொண்டான் மனதிற்குள்.*

*அப்பா இது பெரிய தெப்பக்குளமா.... இல்லடா செல்லம்.. இதுக்குப் பெயர் கடல்... இந்த தண்ணி உப்பா இருக்கும். இதை யாரும் குடிக்க முடியாது.. அப்பன்னா இந்த தண்ணி எதுக்குப்பா....? இது கடல் இதுலதான் மீன்லாம் இருக்கும்... அப்படியா....? எங்கப்பா மீனக் காணோம்....? மீன் கடலுக்குள்ள இருக்கும்டா... அப்படியின்னா நாம உள்ள போயிப் பார்ப்போமா....? அதோ அவங்க உள்ள இருக்காங்கலப்பா.... நாமலும் உள்ள போவோம்பாாாாா.... அவங்க இருக்கிறதுக்குப் பேரு கப்பல்டா. நாமும் கப்பல்ல போயி மீனப் பார்ப்போம்பாாாாா...... இன்னொரு நாள் நம்ம கப்பல்ல போகலாம். இப்ப நாம தண்ணியில் கால வச்சுட்டு பிறகு குதிரையில போவோம். அலைகள் கால்களை நனைத்துச்சென்றன. குழந்தையின் கைகளை இருவரும் பிடித்துக் கொண்டனர். அலையின் வேகத்தைக் கவனத்தில் கொண்டு கால்களை நனைத்தனர். வேகமாய் வந்த அலை குழந்தையின் முகத்தில் தூரலை வீசியது. துடித்துப் போன அவன் குழந்தையைத் தூக்கினான் வேகமாய் துடைத்துவிட்டாள் அவள். கவனமில்லாமல் இருந்துவிட்டோம் என்று வருந்திக் கொண்ட அவன், கோபத்துடன் கடலைப் பார்த்தான். அவனைப் பார்த்துக் கடல் சிரிப்பது போல் தோன்றியது. கடலின் சிரிப்பில் அலைகள் நீண்டு உயர்வது போல் தோன்றியது. என்ன இது? கற்பனைதான். ஒருவேளை வந்துவிட்டடால்... பயமும் கலந்து கொண்டது. நம் மீது கைவைத்தால் நமக்குக் கோபம் வருகிறது. இது இயல்பு தானே. அவ்வாறு தானே கடலுக்கும் இருக்கும் என்பது போல் ஒலித்தது. ஒரு கடல் அலை. குழந்தையைக் காத்துக்கொண்ட அவள் கடலே தூரப் போ என்பது போல் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். இந்தத் தாய்க்கு இவ்வாறு இருக்கிறது என்றால் இந்தக் கடல் தாய்க்கு ஏன் கோபம் வராது. கடலின் கோபம் தான் அந்தச் சுனாமி என்பது போல் தோன்றியது. கடலின் குழந்தைகள் கரையில் தலைகீழாகத் தொங்கின. சில உப்புத்தடவப் பட்டும்*

*உரிக்கப்பட்டும் கிடந்தன. எண்ணெயில் பொறிந்துகொண்டிருந்தன சில. நமதென்றால் குழந்தை. கடல் என்றால்.....?*

**யாழ்மொழி**
**தமிழ்த்துறை**

## இப்புவி வாழ்க்கை

*பண்ணோடியைந்த பாடல் இனிமை*
*மண்ணோடியைந்த மரபு பெருமை*
*பண்போடியைந்த கல்வி தேவை*
*பரிவோடியைந்த உதவி சேவை*
*சொல்லோடியைந்த நயமே கவிதை*
*அறனோடியைந்தகொள்கை நேர்மை*
*கண்ணோடியைந்த கருனை மனிதம்*
*பெண்ணோடியைந்ததாய்மை புனிதம்*
*துணிவோடியைந்த செயலே வீரம்*
*கனிவோடியைந்த இதயம் ஈரம்*
*பணிவோடியைந்த பணமே நிதியம்*
*முழுமனதோடியைந்தவேலை ஆக்கம்*
*திறனோடியைந்த அறிவே ஆற்றல்*
*உழைப்போடியைந்தமுயற்சி உயர்வு*
*நெஞ்சோடியைந்த நேசம் உறவு*
*உலகோடியைந்த வாழ்தல் நியதி*
*எளிமையோடியைந்தஆளுமை கீர்த்தி*
*கையோடியைந்த கலையே நேர்த்தி*
*எதுவும் எதுவோடு இயைந்தால்*
*சிறப்பானதொன்று*
*நிச்சயம் இயையும்..*

**எம்.சசிரேகா**
**உயிர்த்தொழில் நுட்பவியல்**
**இளங்கலை முதலாமாண்டு**

**கவிநடைச் சிறுகதை**

## மாதையனும் மங்கம்மாவும்

*அன்பும்அறிவும் நிறைந்த திருநாடாம்*
*அன்னைத்தமிழ்வாழும் தமிழ்நாட்டில்*
*சிவகாசி சீமையிலே*
*உத்தமபுரம் என்னும் ஊரினிலே*
*தினவெடுத்த தோளும் சுருங்கிய*
*கன்னமும் குழிவிழுந்த கண்களும்*
*நரைபடிந்த தலைக்குச் சொந்தம்*
*மாதையன் என்பதை*
*நம் மாந்தர்க்கு உணர்த்தும்..*
*பொக்கைவாயோஊரையே அளக்கும்*
*ஓட்டைக்காது*
*பெருந்தோட்டைச் சுமக்கும்*
*உணவு படைத்தால்*
*ஊரே மணக்கும்*
*மங்கம்மா என்பது அவள் பெயர்..*
*திருமணம் காண்கையில் சிறியவராம்*
*இல்லறத்தை இன்புறக் கழித்தவராம்*
*அழகுக்கு ஒன்றைப் பெற்றவராம்*
*அகவை அறுபது கடந்தவராம்*
*அருமை மகள் தமிழரசிக்கு*
*தருணம் பார்த்து திருமணம் நடத்தி*
*கணவனோடு அனுப்பியே வைத்தனர்*
*மாதையனும் மங்கம்மாவும்*
*மாடாய் உழைத்து மலைபோல்*
*குவித்திருந்தாலும்*
*செதுக்கித்தின்றதால்*
*செக்களவும் போதவில்லை..*
*உழைக்க மனமிருந்தாலும் கூலி*

கொடுக்க ஆளிருந்தாலும்
உழவு வேலை செய்ய அவர்தம்
உடல் ஒப்பவில்லை..
கொடுத்தே பழகிய கைகள்
இரந்து உண்ண மறுத்தன..
மாதையன் தம்பதி
வெறுத்தனர் வாழ்க்கையை..
பட்டினியாகவே கழிந்தது பாதிநாட்கள்..
ஒருநாள் அளவாய் இருந்த மாவில்
மங்கம்மா அழகாய்
இரு தோசைகள் சுட்டாள்..
அதிலொன்றைக்
கணவருக்குப் படைத்து
மீதமொன்றைத்
தானுண்ண நினைத்தாள்..
மாதையன் வயிறு பசியால் காய
தோசைக்காக உமிழ்நீர் வழிய
மங்கம்மாவை எதிர்பார்த்து
கடிகார மணிபார்த்து காத்திருந்தார்..
வெள்ளைத் தட்டிரண்டில்
தீய்ந்த தோசை
தோசையைத் திண்ண
உடலெல்லாம் ஆசை..
அகவையை மறந்து
உடலெல்லாம் அதிர
மணவாளனைத் தேடி மகிழ்ந்தோடி
வந்தாள் மங்கம்மா..
மங்கம்மாவைக் கண்ட மாதையன்
எனக்கு எதற்கு இரட்டைத் தட்டில் தோசை
பார்க்க பார்க்க
அதிகமாகிறது ஆசை
சுருங்கக் கொடு
சுவைத்து முடிப்பேன் என்றார்..
மாதையன் மனதை அறிந்த மங்கை
எனக்கும் ஒரு வயிறுண்டு அதனால்
உடலில் கொஞ்சம் உயிருண்டு
ஒருவேளை
உணவாவது இருந்திருந்தால்
இதை நான்
உமக்கே கொடுத்திருப்பேன்..
உமக்காக எத்தனையோ
நான் விட்டுக்கொடுத்திருக்கிறேன்
இதையும் தந்தால் செத்திடுவேன்
மறுவேளை உணவின்றி
நீயும் மாள்வாய் என்றாள்
ஆணதிகாரத்தால்
அபகரிக்க வேண்டுமே தவிர
அடங்கிப் போவது அவமானம் எனச்
சிந்தை நொந்து
சிந்தித்துச் சிக்கலுக்கு ஒரு முடிவு
எடுத்தார் மீசை மாதையன்
போட்டியொன்று நமக்குள் உண்டு
வெல்பவர்கள் உண்ணலாம்
தோசைகள் இரண்டு
இந்நொடியிலிருந்த நமக்குள்
உரையாடல் இல்லையென்று
ஆரம்பமானது போட்டி
அறிவுள்ள கிழவி
சம்மதமென தலையை அசைத்தாள்..
இரவும் கழிந்தது பொழுதும் விடிந்தது
மங்கம்மாள் விழித்தாள்
மாதையனும் விழித்தார்

*அவளும் நோக்கினாள்*
*அவரும் நோக்கினார்*
*இருவரும் போட்டியில்*
*கவனம் செலுத்தினர்*
*நீடு நேரம் திறக்காத கதவை எண்ணி*
*திசைக்கொருவாறு பேசினர் ஊரார்*
*ஏதும் தெரியாதது போல்*
*கண்மூடி*
*இருந்தனர் காரணத்திற்குரியோர்..*
*செய்தி பலவாறு பரவிப்*
*பஞ்சாயத்துக் கூடியது*
*கதவை உடைக்கும்படிக்*
*கட்டளை பிறந்தது*
*தாய் தந்தை மாண்டார் எனத்*
*தமிழரசிக்குச் செய்தியும் பறந்தது..*
*செய்தி கேட்ட*
*தமிழரசி திடுக்கிட்டாள்*
*உண்டிலாள்*
*கணவனை நினைத்திடாள்*
*தலைவிரிக் கோலமாய்*
*அலறல் ஓலமாய்*
*ஒப்பாரிவைத்தே ஊரையடைந்தாள்..*
*ஊரார் கதவினை*
*உடைத்து கிடையாய்கிடந்த*
*கிழவனையும்*
*கிழவியையும்*
*கண்டதும் திகைத்தனர்*
*சவமென நினைத்து*
*சடங்குகள் செய்தனர்*
*ஓரக்கண்ணால் கிழவன்*
*கிழவியைப் பார்த்தார்*
*அவளும் நோக்கினாள்*
*அவனும் நோக்கினார்*
*வைராக்கியம் முக்கியம் என்று*
*கண்மூடிக் கிடந்தனர் இருவரும்..*
*சடங்குகள் முடிந்து*
*சடலத்தைத் தூக்கினர்*
*நாலாளுக்கு மேலாளாய்*
*மங்கம்மாவும் மாதையனும்*
*ஊரைச் சுற்றினர்..*
*இறுதியில் இடுகாடு அடைந்தனர்*
*காலில்லா*
*கட்டிலிலிருந்து கணப்பொருளென*
*இறக்கி வைத்தனர்*
*அப்போதும் அவர்தம்*
*முடிவிலிருந்து இரங்கவில்லை*
*தோசையை இழக்க*
*இருவரும் விரும்பவில்லை*
*பெண்பிள்ளை*
*மனம் அடங்க மறுத்தது*
*கிழவியைத்*
*தம் மார்போடு கட்டியணைத்தது*
*கிழவியின் கழுத்தில்*
*கிடந்த முள்வாங்கி*
*அவள் நெஞ்சில் தைத்தது..*
*அம்மா என்று அலறினாள் கிழவி*
*அப்படிப்போடு*
*அம்பிடுதோசையும் எனக்கே*
*என்று எகிறிக் குதித்தான் கிழவன்*
*பேயெனக் கருதிப் பீதியில் ஓடினர்*
*உண்மையறியாத உத்தமபுரத்தார்*
*மாதையனும் மங்கம்மாவும்*
*நடந்தது கூற*
*விட்டுக்கொடுக்காத*

வைராக்கியத்தை மெச்சி
தமிழனின்
தனித்தன்மையாம் பொருளுதவி செய்து
சிந்தை மகிழ்ந்து கலைந்தனர்…

**ஒய்.கமலக்கண்ணன்**
**தமிழ்-இளங்கலை முதலாமாண்டு**

## பிச்சைக்காரப் பாட்டியும் பேரனும்…

பொதுவாக வாழக்கையில் பல நிகழ்வுகள் நடக்கின்றன. ஆனால் சில நிகழ்வுகள் மட்டும் தான் மனிதனின் மனதில் இடம்பெறுகின்றன. பாபு பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலம். அவன் தினமும் பேருந்து பயணமாகத் தான் தனது பள்ளி வாழ்க்கையைத் தொடர்ந்தான். பேருந்து நிலையத்தில் அவன் தினமும் பார்க்கின்ற ஒரு நபர் உண்டு.

கிழிந்த ஆடையுடன் தலைமயிர் பரட்டையாக உடம்பெல்லாம் கோடுகளும் அந்த கோடுகளுக் கிடையில் அழுக்குகளும் முன்வாய் பற்கள் கழன்றும் பார்க்க மிகவும் அருவருப்பாக இல்லை யென்றாலும் அவ்வளவு சீக்கிரமாக யாரும் அந்த பிச்சைக்கார பாட்டியை நெருங்கியதில்லை..
நெருங்குவதுமில்லை.. ஆனால் பாபு மட்டும் பாட்டியைத் தேடிப்பிடித்து பிச்சையிட்டுக்கொண்டு வந்தான். என்னவோ தெரியவில்லை அது அவனுக்கு மிகப் பிடித்திருந்தது.. பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு வேறு பள்ளிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது..

பாபுவிற்குப் பாட்டியின் நினைவு அடிக்கடி வந்து செல்வது உண்டு. நாம் பிச்சை இடவில்லையென்றால் வேறு யார் இடுவார்கள்? என்ற கேள்வி அவனுக்குள் இருந்துகொண்டே இருந்தது. இதனால் அதே பள்ளியில் மீண்டும் பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்தான்.. அது பாட்டிக்காக என்று பல பேருக்குத் தெரியாது.

மெல்ல மெல்ல பாட்டியிடம் பேசத் துவங்கி இருவரும் நெருங்கிய உறவுகளானார்கள். ‘உங்களுக்குச் சொந்தக்காரர்கள் யாரும் இல்லையா..? எங்கே இருக்கிறார்கள்..? என்று வெகு சீக்கிரமாக அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டான்..

அதற்குப் பாட்டி ‘அத ஏம்பா கேக்கற? எனக்கு மொத்தம் ரெண்டு ஆம்பலப் புள்ளைங்க.. சிறுசா இருக்கும் போது என் காலையே சுத்திக்கிட்டு வந்த பயலுக பொண்டாட்டி வந்ததும் அவ பேச்ச கேட்டுக்கிட்டு எனக்கு சோறு போட முடியாதுனு வீட்டவிட்டு

*தொரத்திட்டானுங்கப்பா.. ஒரு தடவ பிச்சை கேட்டு அந்தப் பக்கம் போன போது என்னய பாத்துட்டு பாக்காத மாதிரி போய்ட்டானுங்க.. பிச்சைபோடக் கூட தகுதியில்லாம போயிட்டேனேப்பா.. இவங்கள பெத்தத தவிர வேறு என்ன பாவம் செஞ்சேன்..? என்று ஓ வென அழத் தொடங்கிவிட்டாள் அந்த மூதாட்டி.*

*பிறகு ஆறுதல் சொல்லிவிட்டுக் கிளம்பிய பாபுவின் மனது அன்று இரவு முழுக்க தவித்துக்கொண்டிருந்தது.*

*பாட்டிக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று அவன் மனது உறுத்திக் கொண்டிருந்தது. முனத்தெளிச்சியுடன் மறுநாள் காலை வேகமாகப் பாட்டியைக் காணச் சென்றான்.. ஆனால் பாட்டியைக் காணவில்லை. விசாரித்ததில், பேருந்து நிலையத்தில் பிச்சை யெடுத்து தொந்தரவு செய்ததாகக் கூறிப் பாட்டியைப் போலீஸார் கொண்டு சென்று விட்டதாகப் பூக்கடைக்கார அக்கா கூறினாள்..*

*அன்றிலிருந்து தினமும் வந்து வந்து பார்த்துப் போகிறான் பாபு. மேலும் அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. திறந்த வெளிக் கழிப்பறைச் சுவற்றில் அந்தப் பிச்சைக்காரப் பாட்டியின் உருவம் பதித்த கண்ணீர் அஞ்சலி போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது.. அவனால் அதை சீக்கிரம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கண்ணீர் மல்கி நின்றான்.. ஓவென்று அழ வேண்டும் போல இருந்தது அவனுக்கு.. சற்றுத் தலையை மேலே நிமிர்த்தி வானத்தை நோக்கிப் பார்த்தான் பாபுவிற்கு அந்தப் பாட்டி மேலிருந்து ஆசி வழங்கிக் கொண்டிருந்தாள்...*

**ஐ.பாபு**

**இளங்கலை முதலாமாண்டு**

**வணிக நிர்வாகவியல் துறை அ பிரிவு**

**மாணவர்கள் தங்களின் சுய படைப்புகளை மட்டுமே விடியல் இதழுக்கு அளிக்கவும்**